**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்**
**முன்னிலை:- திருமதி. ஆ. சுபஸ்ரீ, L.L.M.,**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**திருப்பூர் .**

2025-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14 ஆம் நாள் வியாழக்கிழமை
திருவள்ளுவராண்டு 2056, ஸ்ரீவிசுவாவசு வருடம், ஆடி திங்கள் 29 ம் நாள்

**இடைக்கால மனு எண். 43/2025**
**இன்**
**அசல் வழக்கு எண்.58/2024**

லீலாவதி ..மனுதாரர்/1ம் பிரதிவாதி

..எதிர்..

சக்கரையான் ..எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு கடந்த 05.08.2025ம் தேதியன்று என் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.V.பாலசுப்பிரமணியம் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.V.சந்திரன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், மனு ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் ஆய்வில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்

**உத்தரவு**

அசல் வழக்கில் தாக்கல் செய்துள்ள தாவாவை நிராகரிக்க கோரி உரிமையியல் நடைமுறை சட்டம், கட்டளை 7 விதி 11 ன் கீழ் மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்</u> :–

**2.1** அசல் வழக்கு சட்டப்படி தடை செய்யப்பட்டுள்ளதால் நிலைக்கத்தக்கதல்ல. கடந்த 03.06.1994ம் தேதியன்று காலம்சென்ற குருசாமி என்பவருக்கு மனுதாரர்/1ம் பிரதிவாதி பொது அதிகாரம் வழங்கியதாக கூறுவது தவறு.

**2.2** கடந்த 03.06.1994ம் தேதியிட்ட 1ம் பிரதிவாதி வழங்கிய அங்கீகார கடிதத்தின் அடிப்படையில் மேற்படி குருசாமி ஒரு பழனியப்பன், சந்திரசேகரன் மற்றும் வெங்கடாசலம் ஆகியோருடன் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தியதாக கூறி குறித்தவகை நிவாரண வழக்காக அ.வ.எண்.227/2008, 238/2008 மற்றும் 240/2008 ஆகிய வழக்குகளை திருப்பூர், இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்து, கடந்த 13.02.2024ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டது.

**2.3** மேற்படி வழக்குகளில் வழங்கப்பட்ட தீர்ப்பாணையில் மனுதாரர் மேற்படி குருசாமியை அங்கீகரித்து மேற்படி கடிதத்தை வழங்கவில்லை என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், குருசாமியும் அவரது வாரிசுகளும் தாவா சொத்தின் சுவாதீனத்தில் இல்லை என்று தீர்வு காணப்பட்டுள்ளது. எனவே, 03.06.1994ம் தேதியிட்ட கடிதம் குறித்து ஏற்கனவே முடிவு செய்யப்பட்டுள்ளதால் 2020ம் ஆண்டு முதல் மேற்படி குருசாமியிடம் வாதி வாடகைதாரராக உள்ளதும், கடந்த 16.07.2021ம் தேதியன்று இருவரும் குத்தகை ஒப்பந்தம் ஏற்படுத்தியதாக கூறுவது பொய் மற்றும் மோசடியான ஒன்று.

**2.4** உரிமையியல் நடைமுறை சட்டம், பிரிவு 11ன்படி 03.06.1994ம் தேதியிட்ட கடிதத்தின் உண்மை தன்மை ஏற்கனவே தீர்வு காணப்பட்டுள்ளதால் மேற்படி

சட்டப்படி இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல. குருசாமியின் வாரிசுதாரர்கள் வாதியுடன் வஞ்ச கூட்டு சேர்ந்து மேற்படி குத்தகை ஒப்பந்தத்தை ஏற்படுத்தியுள்ளார்கள். அசல் வழக்கில் வழக்கு மூலம் இல்லை. அசல் வழக்கில் தாக்கல் செய்துள்ள தாவா சட்டப்படி தடைசெய்யப்பட்டுள்ளதால் தாவாவை நிராகரிக்ககோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்</u> :–

**3.1** மனுதாரர்கள் மனுவில் கூறியுள்ள சங்கதிகள் பொய் மற்றும் மோசடியானது, அது சட்டப்படியும் பொருண்மைகளின்படியும் நிலைக்கத்தக்கதல்ல. உரிமையியல் நடைமுறை சட்டம், கட்டளை 7 விதி 11ல் குறிப்பிட்டுள்ள காரணங்களின் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்படவில்லை. தாவா சொத்தில் குருசாமியின் வாரிசுதாரர்கள் கடந்த 16.07.2021ம் தேதியன்று ஏற்படுத்திக்கொடுத்த பதிவு செய்யப்பட்ட குத்தகை ஒப்பந்தத்தின் அடிப்படையில் அதன் சுவாதீன அனுபவத்தில் எதிர்மனுதாரர் உள்ளார்.

**3.2** அசல் வழக்கில் 04.04.2024ம் தேதி மற்றும் அதன் தொடர்ச்சியான தேதிகள் என்று வழக்கு மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது என்று மனுதாரர் குறிப்பிடும் வழக்கில் எதிர்மனுதாரர் தரப்பினர் இல்லை என்பதால் அசல் வழக்கு முன்தீர்ப்பு தடை கோட்பாட்டால் பாதிக்கவில்லை. எதிர்மனுதாரர் கூறும் ஆவணங்களின் உண்மை தன்மை அசல் வழக்கின் தீர்வில் தான் முடிவு செய்ய இயலும் எனவே மனுவை தள்ளுபடி செய்யுமாறு எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.** மனுதாரர்கள் தரப்பில் ம.சா.ஆ.1 சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**5.** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதிகள் யாதெனில்," மனுதாரர் கோரிய படி மனுவை அனுமதிக்க வேண்டுமா? என்பதேயாகும்".

**6. <u>தீர்வு</u> :–**

**6.1** மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதத்தில், அசல் வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள 16.07.2021ம் தேதியிட்ட குத்தகை ஒப்பந்தம் பதிவு செய்யப்படாத ஆவணம் என்பதால் அது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், எதிர்மனுதாரரும் ஒரு குருசாமியின் வாரிசுகளும் வஞ்சகூட்டு சேர்ந்து மேற்படி ஆவணத்தை உருவாக்கியுள்ளார்கள் என்றும், குருசாமிக்கும் இம்மனுதாரருக்கும் இடையே மாண்புமிகு இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் அ.வ.எண்.240/2008 வழக்கு நடைபெற்று தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றும், எதிர்மனுதாரர் கூறும் 03.06.2004ம் தேதியிட்ட பொது அதிகாரப்பத்திரம் சட்டத்திற்கு புறம்பாக மோசடியாக உருவாக்கப்பட்ட ஆவணம் என்றும், மாண்புமிகு இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம் அ.வ.எண்.240/2008ல் வழங்கியுள்ள தீர்ப்பு மூலம் அசல் வழக்கு முன்தீர்ப்பு தடை கோட்பாட்டால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், இந்திய பதிவு சட்டம், பிரிவு 17ன் கீழ் மேற்படி குத்தகை ஒப்பந்தம் பதிவு செய்யப்படவில்லை என்றும், சொத்து விபரத்தில் கதவு எண் குறிப்பிடாமல் காலை எண் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், எனவே மனுவை அனுமதிக்குமாறு வாதிட்டார்.

**6.2** எதிர்மனுதாரர்கள் தரப்பில் எழுத்துபூர்வமான வாதுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**6.3** அசல் வழக்கானது, கடந்த 2020ம் ஆண்டு முதல் குத்தகைதாரர் என்ற முறையில் தாவா சொத்தின் சுவாதீனத்தில் எதிர்மனுதாரர் உள்ளதாகவும், அதன் பின்னிட்டு குருசாமியின் வாரிசுகளிடம் 16.07.2021ம் தேதியிட்ட குத்தகை

ஒப்பந்தத்தை ஏற்படுத்திக்கொண்டு தாவா சொத்தின் சுவாதீனத்தை தொடர்வதாகவும், தாவா சொத்தில் உள்ள எதிர்மனுதாரர்/வாதியின் சுவாதீனத்தை மனுதாரர் /பிரதிவாதி இடையூறு செய்வதாக கூறி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**6.4** திருப்பூர், மாண்புமிகு இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம் அ.வ.எண்.240/2008 வழக்கில் கடந்த 13.02.2024ம் தேதி வழங்கப்பட்ட ம.சா.ஆ.1 தீர்ப்புரையில், குருசாமி ஏற்படுத்திக்கொண்ட கிரைய ஒப்பந்தம் குறித்து மட்டும் தான் தீர்வு காணப்பட்டுள்ளது. அவ்வழக்கில் இம்மனுவின் எதிர்மனுதாரர் தரப்பினர் இல்லை. ஆனால், இவ்வழக்கானது கடந்த 16.07.2021ம் தேதியிட்ட குத்தகை ஒப்பந்தத்தின் அடிப்படையில் எதிர்மனுதாரர் தாவா சொத்தின் சுவாதீனத்தில் உள்ளதாக குறிப்பிட்டுள்ளது குறித்தும், தாவா சொத்தில் அவரது சுவாதீனம் சட்டப்படியானதா என்பது குறித்தும் தீர்மானிக்க வேண்டிய வழக்காகும். அ.வ.எண்.240/2008ல் உள்ள தரப்பினர்களும், இவ்வழக்கின் தரப்பினர்களும் வெவ்வேறு நபர்கள். அவ்வழக்கில் தீர்வு காணப்பட்ட எழுவினாக்களும், இவ்வழக்கில் தீர்வு காண வேண்டிய எழுவினாக்களும் வெவ்வேறானவை.

**6.5** உரிமையியல் நடைமுறை சட்டம், கட்டளை **VII விதி 11ன்** கீழ் குறிப்பிட்டுள்ள காரணிகளை இம்மனு பூர்த்தி செய்யவில்லை என்பதாலும், **மாண்புமிகு இந்திய உச்சநீதிமன்றம் 2025 LiveLaw (SC) 698, PANDURANGAN Vs. T.JAYARAMA CHETTIAR & Another** என்ற வழக்கில் முன்தீர்ப்பு தடை கோட்பாடு குறித்து, 1908ம் ஆண்டு உரிமையியல் விசாரணை நடைமுறை சட்டம், கட்டளை 7 விதி 11ன் கீழ் தீர்மானிக்க இயலாது என்று முன்தீர்ப்பு வழங்கியுள்ளதாலும் மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு நிலைக்கத்தக்கதல்ல என்று முடிவு செய்து மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவில்**, மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14 ஆம் நாள் அவையறிய பகரப்பட்டு, 18.08.2025ம் தேதியன்று பதிவேற்றம் செய்யப்பட்டது.

A SUBASHRI
Digitally signed by A SUBASHRI
Date: 2025.08.14 12:49:45 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருப்பூர்.

**மனுதாரர் தரப்பு சாட்சிகள் : இல்லை**

**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :**

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | 13.02.2024 | அ.வ.எண்.240/2008 வழக்கின் தீர்ப்புரை | சான்றிட்ட நகல் |

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** :
இல்லை

A SUBASHRI
Digitally signed by A SUBASHRI
Date: 2025.08.14 12:49:51 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருப்பூர்.